**சுருக்கம்**

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – திட்டப் பெயர் மாற்றம் – “கலைஞர் வீட்டு வசதித் திட்டம்” என்பதை “கலைஞர் வீடு வழங்கும் திட்டம்” எனப் பெயர் மாற்றம் செய்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி1) துறை

அரசாணை (நிலை) எண். 81 நாள்: 5.8.2010

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 68, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 14.06.2010.
2. அரசாணை (நிலை) எண். 74, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.07.2010.

*****

**ஆணை:**

மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்டுள்ள அரசாணைகளில் ஊரகப் பகுதிகளில் ஓலைக்கூரை வேயப்பட்ட தகுதியுள்ள அனைத்துக் குடிசைகளையும் கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய நிலையான வீடுகளாக மாற்றுவதற்கான “ கலைஞர் வீட்டு வசதித் திட்டம்” எனும் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்தவும், அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் வகுத்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. “கலைஞர் வீட்டு வசதித் திட்டம்” என்றழைக்கப்படும் இத்திட்டத்தினை பெயர் மாற்றம் செய்வது குறித்து அரசு ஆய்வு செய்தது. அதனடிப்படையில், “கலைஞர் வீட்டு வசதித் திட்டம்” என்ற பெயரை மாற்றி “கலைஞர் வீடு வழங்கும் திட்டம்” என அழைத்திட அரசு ஆணையிடுகிறது. இத்திட்டம் தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன் ,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை -15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்
அனைத்து மாவட்ட ஊராட்சிகள்
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை, சென்னை–9

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஊவ) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்